# சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் தொழினுட்பவியல் சேவையின் கால்டை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. சபரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழினுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02.** விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- **20.03. 2026**

**03.**

3.1 பொதுத் தகைமை :-

I. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

II. எந்தவொரு மதப் பிரிவையும் சார்ந்த மதகுருமார்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

III. சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவிடமில்லை எனின், விண்ணப்பதாரியின் கணவர் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

V. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு **18** வயதிற்கு குறையாத **35** வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

VI. ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு உரிய தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பன பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

VII. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு விண்ணப்பதாரிகள் இப் பதவிக்குரிய அனைத்து கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

3.2 கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

| கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் |
|---|---|---|
| பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | |
| தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் (சாதாரண தரத்தை ) சித்தியடைந்திருத்தல். | கா.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் (உயிரியல் விஞ்ஞானத்துடன் இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய 02 பாடங்களில்) அல்லது உயிரியல் அமைப்பு தொழில்நுட்ப பாடவிதானத்தின் கீழ் (உயிரியல் அமைப்பு தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம்) ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.<br><br>(பொது பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்த்து) | I. கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கால்நடை பராமரிப்பு பயிற்சிக் கல்லூரியில் இருந்து பெற்றுக் கொண்ட கால்நடை பராமரிப்பு டிப்ளோமா சான்றிதழ்<br>அல்லது<br>II. அநுராதபுரம் / சிற்பிகுலம் கால்நடை நிர்வாக பயிற்சி நிலையத்தினால் வழங்கப்படும் வருட டிப்ளோமா சான்றிதழ்<br>அல்லது<br>III. கரதகொல்ல கால்நடை நிர்வாக கல்லூரியினால் வழங்கப்படும் வருட டிப்ளோமா சான்றிதழ் |

**குறிப்பு – நிழவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 06**

**04. இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**

இலக்கம் 10/2025 மற்றும் 25.03.2025 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய ,இந்தப் பதவிகளின் III தரத்திற்கான சம்பள வகுதி MN 3 -2025 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.52,250/-10x800-11x1190-10x1320-10X1350-100,040/- ஆகும்.

05. III ஆம் தரத்திற்குரிய பதவிகள் நிரந்தரமானது.ஓய்வூதியத்துடன் கூடியது.ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை**

வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/90 விதிமுறைகளின் படி மாவட்ட மக்கள் தொகையின் விகிதாசார அடிப்படையில் மாவட்ட தகைமைகளின் ஒழுங்கு முறைகளுக்கு ஆட்சேர்க்க வேண்டிய எண்ணிக்கை சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி உரிய ஆட்சேர்த்தல் நடைபெறும். சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு 40% ஆகும்.

<u>கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிகளுக்கான பரீட்சையின் பாடத்திட்டம்</u>

01).உளச்சார்பு பரீட்சை – காலம் 01 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் திறன் , பகுப்பாய்வு திறன் ,நேர முகாமைத்துவத்தினை தீர்மானித்தல் தொடர்பான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது.

02).பாடம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை - காலம் 03 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

பதவிக்குரிய தொழில்நுட்பவியல் அறிவினை அளவிடும் வினாக்களை உள்ளடக்கிய பின்வரும் விடயங்களைக் கொண்ட வினாத்தாளாகும்

I. இலங்கை கால்நடை வளர்ப்பின் தற்போதைய வள திறன் , தற்போதைய சூழ்நிலை மற்றும் பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பு

II. இலங்கையில் விலங்கு உற்பத்தி முறைகள் , உற்பத்தி அளவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள் இலங்கையில் தற்போதுள்ள கால்நடை வளர்ப்பு பண்ணை முறைகள் , அவற்றின் இருப்பிடம் மற்றும் விநியோகம்

III. பண்ணை விலங்குகளை இனப்பெருக்கம் செய்வதற்கு பொதுவாகப் பயன்படுத்தும் முறைகள்

IV. விலங்குத் தொற்று நோய்கள் , விலங்கு நோய் கட்டுப்பாட்டு நடைமுறைகள் , நோய்வாய்ப்பட்ட விலங்குகளின் மாதிரிகளை சேகரித்தல் மற்றும் போக்குவரத்து

V. ஒருங்கிணைந்த பண்ணை முறைகள் மற்றும் மறுசுழற்சி முறைகள்

VI. கால்நடை வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்கள் பால் பதப்படுத்துதல் , இறைச்சி பதப்படுத்துதல் , கால் நடை தீவன உற்பத்தி

VII. விலங்கு உற்பத்தி செயல்முறை , பண்ணை அறிக்கையிடல் மற்றும் கணக்கு பகுப்பாய்வு , விலங்கு பண்ணை திட்டமிடல் தொடர்பான வருமானம் மற்றும் செலவு கணக்கீட்டு முறைகள்

VIII. அறிவியல் தகவல்களை பரப்புதல் முறையின் பயன்பாடு மற்றும் அதன் செயற்திறன்

இப பரடசை பரடசை ஆணையாளர நாயகம அல்லது சபரகமுவ மாகாண அரச சேவைகள ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தகுதி அடிப்படையில் வரிசையில் வெற்றிடங்களை நிரப்பும் போது சமமான மதிப்பெண்களைப் பெற்ற தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இருந்தால் சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 01/2024 அமைய விண்ணப்பதாரிகளிடம் மேலும் பின்வருமாறு பரீட்சைகள் நடத்த முடிவு செய்யலாம்.

a) விண்ணப்பதாரிகளின் திறனை மதிப்பிடுவதற்கான எழுத்துப் பரீட்சை

b) தகுதி அடிப்படையிலான நேர்காணல்

**07.** விண்ணப்பிக்கும் முறை :-

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.2 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் , விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ கருதப்படமாட்டாது.விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும். விண்ணப்பதாரியினால் பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தில் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிக்கு தங்கள்கள் கையொப்பத்தினை சான்றுபடுத்திய அனுமதியட்டையினையே முன்வைக்க வேண்டும்.

7.3 பரீட்சைக் கட்டணம் **ரூ.600/-** ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் **20.03.02.99** என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணபத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு ( தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.4 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 20.03.2026 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் **"செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி "** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026 "** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் ,பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

7.5 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும். அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ் ரத்னாயக
செயலாளர்
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
19.02.2026

மாதிரி விண்ணப்பபப்படிவம்

**சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் தொழினுட்பவியல் சேவையின் கால்டை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026**

**OPEN COMPITITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS IN THE TECHNICAL SERVICE OF THE SABARAGAMUWA PROVINCIAL PUBLIC SERVICE LIVESTROK DEVELOPMENT INSTRUCTOR GRADE III - 2026**

---

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்கு தோற்றும் மொழி

சிங்களம்

தமிழ் –

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்

01. அ). விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : - (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் GUNAWARDHANA M.G.B.S.K.)

..........................................................................................................

ஆ). முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ..........................................................

இ). முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................

ஈ). தேசிய அடையாள அட்டை இலக்கம்

உ). தொலைபேசி இலக்கம்

02. I. நிரந்தர முகவரி: - ..........................................................................................

II. நிரந்த வதிவிட மாவட்டம் :- இரத்தினபுரி கேகாலை

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 20.03.2026 சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர பதிவுக் காலம் :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

03. I. பால் :- உரிய இலக்கத்தினை

பெண்-1 , ஆண-0

II. பிறந்த திகதி : -

வருடங்க மாதங்க நாட்க

III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 20.03.2026 வயது:-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

04. கல்வித் தகமை

4.1 கா.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரம்:

வருடம் : ........................ சுட்டெண் : ..............................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(பெறுபேறுகளின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

4.2 கா.பொ.த (உ.த) பரீட்சை தொடர்பான விபரம் :

வருடம் : ........................ சுட்டெண் : ..............................

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(பெறுபேறுகளின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

4.3 தொழில்நுட்ப தகைமை :

| நிறுவனம் | பாடநெறி | காலம் | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

( டிப்ளோமா சான்றிதழ்களின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

05. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு எண் : ..............................
பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ..............................

பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.
( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும்

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை

.................................... ஆகிய என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன்.என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் என்னால் விண்ணப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட நியமனம் தொடர்பாக என்னுடைய உரிமையை கவனத்திற் கொள்ளாததுடன், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமென நான் நன்கு அறிவேன்.அத்துடன் பரீட்சை இடம்பெறுவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் என இத்தால் அறிவிக்கினறேன்.

........................ ..............................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்
(தேவையற்ற சொற்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ .................................. என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................. ஆந் திகதி வைத்தார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் பெயர் : ..........................................................

கையொப்பம் : ..................................................

பதவி மற்றும் பதவி முத்திரை : ......................................................

(இச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க முப்படையின் அதிகார தரத்திலுள்ள அதிகாரியொருவர் , பொலிஸ் சேவையில் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றில் உள்ள அதிகாரி , அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

**அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள தலைவர்**
சான்றிதழ் **(தேவையற்ற சொற்களை நீக்கவும்)**

திரு./திருமதி./செல்வி./ ........................................... தற்போது ...................... அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் நிரந்தர ஓய்வூதியமுள்ள பதவியொன்றில் சேவையில் உள்ளார் என்பதனையும் , அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும் , ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்படவில்லை என்பதனையும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என்பதனையும் உறுதிபடுத்துகின்றேன்.இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கேற்ப நிறுவனமொன்றுக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கலாம் என்பதனையும் பரிந்துரைக்கின்றேன்.

திகதி ............................................          .................................................

திணைக்களத் தலைவர் கையொப்பம்
(உத்தியோக முத்திரையை வைக்கவும்)